වැම්පියන් ඇකඩමිය Champion Academy සම්පියන් අකඩමි 5


தரம் ஐந்து மாணவர்களுக்கான நுண்ணறிவு வினாக்களின் தொகுப்பு – 2023 (செயலட்டை – 01)

பெயர் : .....

(01) ஒரு வெதுப்பகத்தில் இருந்த **25 kg 500 g** கோதுமை மா மூலம் உணவுப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு முதலாம் நாளில் **17 kg 250 g** உம் இரண்டாம் நாள் **9 kg 150 g** உம் மூன்றாம் நாள் **2 kg 750 g** மீதியும் எஞ்சியது. மூன்று நாட்களிலும் பயன்படுத்திய கோதுமை மாவின் அளவு?

(1) **14 kg 650 g** (2) **16 kg 350 g** (3) **22 kg 750 g**

(02) அருகிலுள்ள ஒன்றோடொன்று இணைந்த நான்கு தாயக்கட்டைகளில் எதிர்முகங்களின் கூட்டுத்தொகை 7 ஆகும். ஒன்றோடொன்று இணைந்த இரண்டு பக்கங்களின் கூட்டுத்தொகை 8 ஆகும் எனின், அம்புக்குறி **A** காட்டும் திசையில் தெரியக்கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை?



(1) 6 (2) 5 (3) 4

(03) ஐந்து மாம்பழங்கள் வாங்கும் ஒருவர்க்கு மூன்று கொய்யாப் பழங்கள் மேலதிமாக வழங்கப்படும். அருணாவுக்கு மாம்பழங்களும் கொய்யாப்பழங்களும் மொத்தமாக 64 கிடைத்தால், அவளுக்கு கிடைத்த கொய்யாப் பழங்கள் எத்தனை?

(1) 8 (2) 16 (3) 24

(04) ஒரு சுற்றுலாவில் மூன்று அம்மாமார்களும் மூன்று மகள்மார்களும் பாட்டியும் மற்றும் பேரப் பிள்ளைகள் இருவரும் கலந்து கொண்டனர். சுற்றுலாவில் கலந்து கொண்டவர்கள் எத்தனை பேர்?

(1) 9 (2) 8 (3) 6

(05) சிறிய சக்கரம் ஒன்று நான்கு தடவைகள் சுழலும் போது பெரிய சக்கரம் ஒரு தடவை சுழலும் எனின் பெரிய சக்கரம் 24 தடவைகள் சுழலும் போது சிறிய சக்கரம் எதத் னை தடவை சுழலும்?

(1) 6 (2) 48 (3) 96

(06) ஒருவன் ரூபா 30க்கு 12 மாம்பழங்களை வாங்கினான். அடுதத் நாள் ஒரு மாம்பழம் 50 சதத்தினால் அதிகரித்தால் முதல் நாள் 12 மாம்பழங்களை வாங்கிய பணத்திற்கு எத்தனை மாம்பழங்களை தற்போது வாங்க முடியும்?

(1) 10 (2) 8 (3) 6

(07) ஒரு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு அதன் பொன்விழா 2000 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. அவ்வேளை அவ் விழாவில் பங்குபற்றிய லலிதாவின் வயது 12 ஆகும். அந்நிறுவனத்தின் நூற்றாண்டு விழா நடைபெறும் போது லலிதாவிற்கு எத்தனை வயது ஆகும்?

(1) 62 வயது (2) 75 வயது (3) 87 வயது

(08) குறித்த ஒரு ஆடைத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகள் ஒவ்வொரு மாதமும் இரட்டிப்பாக குறைவடைந்து சென்றது. மார்ச் மாதம் 250 ஆடைகள் உற்பத்தி செய்யப்பட்டால் ஜனவரி மாதம் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகள் எத்தனை?

(1) 1000 (2) 500 (3) 125

(09) கடையொன்றில் 6 சவர்க்காரக்கட்டி உறைகளை வழங்கினால் ஒரு சவர்க்காரம் இலவசமாக வழங்கப்படும் என அறிவித்தல் பலகையில் குறிப்பிடப்பட்டிருந்தது. பிள்ளையொன்று கடைக்குச் சென்று 36 சவர்க்காரக்கட்டி உறைகளை வழங்கும்போது கிடைக்கும் சவர்க்கார கட்டிகளின் உயர்ந்தபட்ச எண்ணிக்கை யாது?

(1) 6 (2) 7 (3) 8

(10) உரு காட்டுவது ஒரு பிள்ளை விளையாடுவதற்காக அமைத்த கட்டங்களாகும். இங்கு பிள்ளை ஆரம்ப கட்டத்திலிருந்து நிழற்றியுள்ள கட்டங்களைத் தவிர்த்து இறுதிக் கட்டத்திற்குச் செல்ல வேண்டும். பிள்ளை ஒரு பாய்ச்சலில் குறைந்தது ஒரு கட்டமும் கூடியது மூன்று கட்டங்களையும் பாய்ந்து செல்ல முடியும். எனின், அப்பிள்ளை குறைந்தது எத்தனை பாய்ச்சலில் இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கும்?



(1) 9 (2) 7 (3) 6

zoom Online
வகுப்புக்கள்

LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk || www.lkedu.lk
76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை



" தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் "

PRIMARY

- தமிழ்
- நுண்ணறிவு
- கணிதம்
- பேச்சு சிங்களம்
- சுற்றாடல்
- பேச்சு ஆங்கிலம்





SECONDARY

- ICT
- MATHS
- ENGLISH
- TAMIL
- HISTORY
- SCIENCE

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் | தொடக்கம்
5 வரை நடைபெறுகின்றன

76667-4945

(11) முத்திரை சேகரிப்பில் அமலா குறித்தவொரு பங்கை சேகரித்தாள். விமலா, அமலா சேகரித்த முத்திரையின் அரைப்பங்கையும் கமலா, அமலா சேகரித்த முத்திரையின் இரு பங்கையும் சேகரித்தாள் எனின்,

(1) கூடியளவு பங்கு முத்திரையை சேகரித்தவள் அமலா ஆவாள்.

(2) அமலாவும் விமலாவும் சேகரித்த முத்திரைகள் கமலா சேகரித்த முத்திரைகளின் எண்ணிக்கைக்குச் சமம்.

(3) அமலா சேகரித்த முத்திரைகளின் எண்ணிக்கை கமலா சேகரித்த முத்திரைகளின் எண்ணிக்கையின் அரைப்பங்காகும்.

(12) ஒரு பரீட்சையில் பத்து வினாக்கள் வழங்கப்பட்டன. முதலாம் வினாவிற்கு ஒரு புள்ளி, இரண்டாம் வினாவிற்கு இரண்டு புள்ளிகள், மூன்றாம் வினாவிற்கு மூன்று புள்ளிகள் என தொடரான புள்ளிகள் பத்து வினாக்களுக்கும் வழங்கப்பட்டன. 43 புள்ளிகளைப் பெறும் மாணவன் ஒருவன் நிச்சயமாக எந்த இரண்டு வினாக்களுக்கும் சரியாக விடையளித்திருக்க முடியும்?

(1) முதலாம் வினா, ஆறாம் வினா (2) இரண்டாம் வினா, பத்தாம் வினா (3) நான்காம் வினா, எட்டாம் வினா

(13) நான் அவனைப் போல் அல்ல. ஆனால் அவன் என்னைப் போல் அல்ல ஆகவே,

(1) நான் அவனைப் போன்றவன் (2) அவன் என்னைப் போன்றவன் (3) நாம் இருவரும் வேறுபட்டவர்கள்

(14) வீடு ஒன்றைக் கட்டுவதற்கு 8 மனிதர்களுக்கு 10 நாட்கள் எடுக்கும். அவர்கள் ஏழு நாட்கள் வேலை செய்தனர். பின்னர் 4 பேர் விலகிச் சென்றால், எஞ்சிய வேலையை எத்தனை நாட்களில் முடிப்பர்?

(1) 4 நாட்களில் (2) 6 நாட்களில் (3) 8 நாட்களில்

(15) புகையிரதமொன்றில் 240 பயணிகள் பயணித்தனர். அடுத்த புகையிரத நிலையத்தில் அரைவாசி பயணிகள் இறங்கும் அதேவேளை, இறங்கிய பயணிகளின் மூன்றில் ஒரு பங்கினர் மீண்டும் புகையிரதத்தில் ஏறினர். தற்போது புகையிரதத்தில் உள்ள பயணிகள் எத்தனை?

(1) 120 (2) 160 (3) 200

(16) ஆசிரியர் மாணவர்களுக்கு வாய்மொழியாக இலக்கங்களைக் கூறி பயிற்சிக் கொப்பியில் எழுதச் சொன்னார். நிசார் 1285 என்ற என்னை 1582 எனவும், கமலினி 1258 எனவும் எழுதினாள். ஆசிரியர் கூறிய எண்ணுக்கும் இருவரும் எழுதிய எண்களுக்கும் இடையிலான வித்தியாசத்தின் கூட்டுத்தொகை யாது?

(1) 27 (2) 297 (3) 324

(17) ஒரு சாக்குப் பையில் இருந்த பருப்பு **250 g** கொண்ட பைக்கற்றுக்களாக பொதி செய்யப்பட்டன. இறுதியாக பைக்கற்றாக்குவதற்கு **50 g** பருப்பு தேவைப்பட்டது. எனின் சாக்குப் பையில் இருந்த பருப்பு எவ்வளவு?

(1) **1050 g** (2) **1200 g** (3) **1400 g**

(18) ஒரு பாடசாலையில் மாணவத் தலைவர் பதவிற்காக வாய்மொழிப் பரீட்சை நடத்தப்பட்டது. இதில் கலந்து கொண்ட மாணவனுக்கு ஐந்து வினாக்கள் கேட்கப்பட்டன. முதல் வினாவிற்கான புள்ளிகளின் எண்ணிக்கை 4 ஆகும். அடுத்த நான்கு வினாக்களின் புள்ளிகளின் எண்ணிக்கை வினாவிற்கு முந்திய வினாவின் புள்ளிகளின் எண்ணிக்கையின் மூன்றுமடங்காகும். எனில், 160 புள்ளிகளைப் பெறும் மாணவன் எந்த வினாவிற்குச் சரியாக விடையளிக்கவில்லை?

(1) மூன்றாம் (2) நான்காம் (3) ஐந்தாம்

(19) 25 படிகள் கொண்ட படிக்கட்டில் அஹ்தா 1 வது படியிலும் அய்மன் 25 வது படியிலும் நின்றனர். அஹ்தா ஒரு படி ஏறும் அதேவேளை அய்மன் இரண்டு படிகள் வீதம் இறங்கினால், இருவரும் எத்தனையாவது படியில் ஒன்றாக சந்திப்பர்?

(1) 8 (2) 9 (3) 17

(20) தாயார் தன்னிடத்தில் இருந்த பணத்தில் 1/2 ஐப் பங்கைப் புத்தகங்கள் வாங்கச் செலவழித்தார். அதன் பின்னர் அவர் மீதிப் பணத்தை இருசம பகுதிகளாகப் பிரித்து அவற்றில் ஒரு பகுதியை ஆடைகள் வாங்கச் செலவழித்தார். பின்னர் அவரிடம் எஞ்சியிருந்த பணம் ரூ. 50 எனின், அவர் புத்தகங்கள் வாங்கச் செலவழித்த பணம் யாது?

(1) ரூ. 50 (2) ரூ. 100 (3) ரூ. 200

(21) **2kg** அரிசியின் விலை = **1kg** பருப்பின் விலை
2kg பருப்பின் விலை = **1kg** மிளகாயின் விலை எனின்,
பின்வரும் அட்டவணைக்கேற்பக் கூடுதலான பணத்தைக் கொடுக்க வேண்டியவர் யார்?

விஜய்	கமலா	சிறில்	பாலா
2kg அரிசி	4kg அரிசி	1kg அரிசி	2kg அரிசி
1kg பருப்பு	2kg பருப்பு	2kg பருப்பு	1kg பருப்பு
1kg மிளகாய்	1kg மிளகாய்	2kg மிளகாய்	2kg மிளகாய்

(1) விஜய்

(2) கமலா

(3) சிறில்

www.ikedu.lk

(22) கண்ணன் 14 விசுக்கோத்துப் பெட்டிகளைக் கடையில் வாங்கி வீட்டிற்குக் கொண்டு வரவேண்டி இருந்தது. அவன் ஒரு தடவை 4 விசுக்கோத்துப் பெட்டிகளை மாத்திரம் கொண்டு வரலாம். இதற்கேற்ப எல்லா விசுக்கோத்துப் பெட்டிகளையும் கொண்டு வருவதற்கு அவன் குறைந்த பட்சம் எத்தனை தடவை செல்ல வேண்டும்?

(1) 3 (2) 4 (3) 5

(23) மருந்து குடிப்பதற்காக நோயாளி ஒருவருக்கு வைத்தியர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தலை வழங்கினார்.
"ஒரு தடவையில் 2 வில்லைகள் வீதம் நாளொன்றுக்கு 3 தடவைகள் (சாப்பாட்டுக்குப் பின்னர்) எடுக்கவும்"
நோயாளிக்கு 50 மருந்து வில்லைகள் தரப்பட்டுள்ளன. முதலாவது மருந்து வேளை காலை சாப்பாட்டுக்குப் பின்னர் எடுக்கப்பட்டதாயின், அம்மருந்து வில்லைகளின் எண்ணிக்கை எத்தனை முழு நாட்களுக்குப் போதுமானது?

(1) 8 (2) 9 (3) 25

(24) ஒரே இலக்கம் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் இருக்கத்தக்கதாக 20 அட்டைகளில் ஓர் இலக்கம் வீதம் எழுதப்பட்டுள்ளது. 10 அட்டைகளில் இருக்கும் இலக்கங்களின் கூட்டுத்தொகை 12 ஆகும். எஞ்சியுள்ள 10 அட்டைகளில் இருக்கும் இலக்கங்களின்கூட்டுத்தொகைக்கு இருக்கத்தக்க ஆகவும் கூடிய பெறுமானம்?

(1) 20 (2) 60 (3) 90

(25) ஒரு வீட்டில் தொலைக்காட்சி பி.ப. 1.00 தொடக்கம் பி.ப. 3.15 வரைக்கும் கணினி பி.ப. 2.15 தொடக்கம் பி.ப. 3.30 வரைக்கும் மின்விசிறி பி.ப. 2.30 தொடக்கம் பி.ப. 3.45 வரைக்கும் தொழிற்பட்டன. எனின், மூன்றும் ஒன்றாக தொழிற்பட்ட நேரம்?

(1) 45 நிமிடம் (2) 1 மணித்தியாலம் (3) 1 மணித்தியாலம் 15 நிமிடம்

(26) சங்கரி முதல் நாளில் ஓர் உண்டியலில் ரூ. 10 ஐ இடுகிறாள். அவள் அதன் பின்னர் ஒவ்வொரு நாளும் முந்திய நாளில் இட்ட பணத்திலும் பார்க்க ரூ. 10 வீதம் கூடுதலாக உண்டியலில் இடுகின்றாள். இவ்வாறாக உண்டியலில் சேரும் மொத்தப் பணம் எத்தனையாம் நாளில் முதன் முதலாக ரூ. 500 இலும் கூடுதலாக இருக்கும்?

(1) 8 (2) 9 (3) 10

(27) குகன் நின்ற வரிசையில் அவனுக்கு முன்னால் எட்டுப் பேர் நின்றனர். வரிசையின் கடைசியில் நின்றவர் முதலாவது நபராக வரும் வகையில் அனைவரும் மறுபக்கத்திற்குத் திரும்பினர். அப்போது குகனின் முன்னால் மூவர் நின்றனர் எனின், அவ்வரிசையில் மொத்தமாக எத்தனை பேர் நின்றனர்?

(1) 10 பேர் (2) 11 பேர் (3) 12 பேர்

(28) பின்வரும் ஒளிப்படத்தைப் பார்க்க. அந்த ஒளிப்படம் நாளின் எந்நேரத்தில் எடுக்கப்பட்டது என்பதைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்க.



(1) மு.ப. 6.00 அளவில்
(2) மு.ப. 10.00 அளவில்
(3) நண்பகல் 12.00 அளவில்

(29) ரமணன் தனது வீட்டிலிருந்து வடக்கு நோக்கிச் சிறிது தூரம் சென்ற பின் வலது கைப்பக்கம் திரும்பிச் சிறிது தூரம் சென்றான். பின்பு வலது கைப் பக்கம் திரும்பிச் சிறிது தூரம் சென்று, மீண்டும் வலது கைப்பக்கம் திரும்பி சிறிது தூரம் சென்ற பின் இறுதியில் இடது பக்கம் திரும்பினான். இப்போது ரமணன் எந்தத் திசையை நோக்கி நிற்கின்றான்?

(1) வடக்குத்திசை (2) மேற்குத்திசை (3) தெற்குத்திசை

(30) நிமலன், நாதன், மீனா, குமாரி என்ற நான்கு மாணவர்களில் இருவரை ஆசிரியை தெரிவு செய்ய வேண்டியுள்ளது. ஆசிரியை அதனை ஒன்றிலிருந்தொன்று வேறுபட்ட எத்தனை விதங்களில் செய்யலாம்?

(1) 2 (2) 4 (3) 6

(31) ஒரு பிள்ளை தனது வீட்டிலிருந்து சந்தைக்குச் சென்றபோது மருத்துவமனையையும் பாடசாலையையும் கடந்து செல்ல நேரிட்டது. வீட்டிலிருந்து பாடசாலைக்குள்ள தூரம் வீட்டிலிருந்து மருத்துவமனைக்குள்ள தூரத்தின் இரு மடங்காகும். மருத்துவமனையிலிருந்து சந்தைக்குள்ள தூரம் மருத்துவமனையிலிருந்து பாடசாலைக்குள்ள தூரத்தின் இருமடங்காகும். இதற்கேற்ப பின்வருவனவற்றில் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

(1) வீட்டிலிருந்து மருத்துவமனைக்குள்ள தூரம் பிள்ளை சென்ற மொத்தத் தூரத்தின் 1/2 ஆகும்.

(2) மருத்துவமனையிலிருந்து பாடசாலைக்குள்ள தூரம் பிள்ளை சென்ற மொத்தத் தூரத்தின் 1/3 ஆகும்.

(3) மருத்துவமனைக்கும் சந்தைக்கும் நடுவில் பாடசாலை உள்ளது.

www.ikeou.lk


(32) ஒரு வாகனம் ஒரு லீற்றர் பெற்றோலில் 10 கிலோமீற்றர் செல்கின்றது. 10 லீற்றர் பெற்றோலை நிரப்பிக்கொண்டு பயணத்தை ஆரம்பித்த வாகனம் 60 கிலோமீற்றர் சென்றது. எஞ்சியிருக்கும் பெற்றோலில் வாகனம் எத்தனை கிலோமீற்றர் செல்லும்?

(1) 60 (2) 40 (3) 30

(33) ஒரு புகையிரதம் 45 ஆவது கிலோமீற்றர் கல்லிலிருந்து 50 ஆவது கிலோமீற்றர் கல்லைக் கடப்பதற்கு 5 நிமிடம் எடுத்தது. புகையிரதம் அதே கதியில் சென்றால் 80 ஆவது கிலோமீற்றர் கல்லைக் கடப்பதற்கு மேலும் எவ்வளவு நிமிடம் எடுக்கும்?

(1) 80 (2) 50 (3) 30

(34) ஓர் அடைப்பின் ஒரு பக்கத்தின் நீளம் 10 மீற்றர் ஆக இருக்குமாறு வரையப்பட்டுள்ள ஒரு பாதை நெய்யரி அருகே காணப்படுகிறது.



அருகிலுள்ள பாதை நெய்யரியில் கமலா **A** யிலிருந்து **D** யினூடாக **B** யிற்கும் முரளி **B** யிலிருந்து **C** யினூடாக **A** யிற்கும் பயணஞ் செய்தனர். இதற்கேற்ப,

(1) கமலாவும் முரளியும் ஒரே அளவு தூரத்திற்குப் பயணஞ் செய்துள்ளனர்.

(2) முரளி கமலாவிலும் கூடுதலான தூரம் பயணஞ் செய்துள்ளான்.

(3) இருவரும் பயணஞ் செய்த மொத்தத் தூரம் 220 மீற்றர் ஆகும்.

(35) ஒரு பாத்திரத்தில் 1.5 லீற்றர் நீர் உள்ளது. அப்பாத்திரத்தில் உள்ள ஒரு சிறிய துவாரத்திலிருந்து ஒவ்வொரு நிமிடமும் 50 மில்லிலீற்றர் நீர் கசிந்து வெளியேறுகின்றது. அதற்கு ஏற்ப அப்பாத்திரம் முற்றாக வெறுமையாவதற்கு எடுக்கும் நேரம் எத்தனை நிமிடம்?

(1) 20 (2) 30 (3) 40

(36) மனிதன் ஒருவன் படம் ஒன்றைக் காட்டிப் பின்வருமாறு கூறினான். "எனக்கு சகோதரனோ, சகோதரியோ இல்லை. இருந்த போதும் இப்படத்தில் இருப்பவரின் தந்தை எனது தந்தையாரின் புதல்வர் ஆவார்." இம்மனிதன் யாருடைய படத்தைக் காட்டினான்?

(1) தனது தந்கையின் (2) தனது (3) தனது மகளின்

(37) குறிஞ்சி மாகாணத்தில் பூங்குடிக் கிராமத்தின் வீடுகளில் போக்குவரத்துக்காக சைக்கிள் அல்லது மோட்டார் சைக்கிள் காணப்பட்டது. இவை இரண்டும் உள்ள ஒரு வீடும் இல்லை. குறிஞ்சி மாகாணத்தில் மோட்டார் சைக்கிள் உள்ள வீடுகள் பூங்குடிக் கிராமத்தில் மாத்திரமே உண்டு. இவ்விவரங்களின் படி உறுதியாகக் கூறக்கூடியது யாது?

(1) குறிஞ்சி மாகாணத்தில் மோட்டார் சைக்கிள் உள்ள வீடுகள் சைக்கிள் உள்ள வீடுகளை விட அதிகம்.

(2) சைக்கிள், மோட்டார் சைக்கிள் இரண்டும் உள்ள வீடுகள் எதுவும் பூங்குடிக் கிராமத்தில் இல்லை.

(3) குறிஞ்சி மாகாணத்தில் பணக்காரர்களின் வீடுகளில் சைக்கிள், மோட்டார் சைக்கிள் இரண்டும் இருந்தன.

(38) குமார் தனது 10 வது பிறந்தநாளை இன்றைக்கு இரு ஆண்டுகளுக்கு முன்னர் கொண்டாடினான். அன்று லலிதாவின் வயது 4 ஆண்டுகளாக இருந்தது. இதற்கேற்ப குமாரினதும் லலிதாவினதும் வயதுகள் தொடர்பான சரியான கூற்று யாது?

(1) இன்று குமாரின் வயது லலிதாவின் வயதின் இரு மடங்காகும்.

(2) இன்று குமார் லலிதாவிலும் இரு ஆண்டுகளினால் மூத்தவன்.

(3) இன்னும் 5 ஆண்டுகளில் லலிதாவின் வயது 10 ஆண்டுகளாகும்.

(39) ஒரு பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு பரீட்சைச் சுட்டெண் ஆசிரியரினால் வழங்கப்பட்டது. 001 இலிருந்து 100 வரை சுட்டெண் வழங்கப்பட்டது. இதில் எந்தப் பிள்ளையும் வழங்கப்படும் சுட்டெண் கூட்டுத்தொகை 13ஐ விரும்பவில்லை. அவ்வாறு சுட்டெண் வழங்கிய போது 13ஐ கூட்டுத்தொகையாக பெற்றுக் கொண்ட மாணவர்கள் எத்தனை பேர்?

(1) 6 (2) 7 (3) 8

(40) மின்சாரப் பாவனைக் கட்டணம் கணக்கிடும் போது முதல் அலகு 30 இற்கு ரூபா 1.00 வீதமும், அடுத்த 15 அலகுகளுக்காக ஓர் அலகுக்கு ரூபா 2.00 வீதமும், அதற்கடுத்த ஓர் அலகுக்கு ரூபா 3.00 வீதமும் அறவிடப்படும். அதற்கமைய மின்சார அலகுகள் 65 இற்கு அறவிட வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?

(1) ரூபா 100.00 (2) ரூபா 120.00 (3) ரூபா 135.00

www.ikedu.lk

தரம் ஐந்து மாணவர்களுக்கான நுண்ணறிவு வினாக்களின் தொகுப்பு – 2023 (செயலட்டை – 01)

விடைகள்

வினா இலக்கம்	விடைகள்
01	(3) **22 kg 750 g**
02	(2) 5
03	(3) 24
04	(3) 6
05	(3) 96
06	(1) 10
07	(1) 62 வயது
08	(1) 1000
09	(2) 7
10	(3) 6
11	(3)
12	(1) முதலாம் வினா, ஆறாம் வினா
13	(3) நாம் இருவரும் வேறுபட்டவர்கள்
14	(2) 6 நாட்களில்
15	(2) 160
16	(3) 324
17	(2) **1200 g**
18	(3) ஐந்தாம்
19	(2) 9
20	(2) ரூ. 100

வினா இலக்கம்	விடைகள்
21	(3) சிறில்
22	(2) 4
23	(1) 8
24	(3) 90
25	(1) 45 நிமிடம்
26	(3) 10
27	(3) 12 பேர்
28	(2) மு.ப. 10.00 அளவில்
29	(3) தெற்குத்திசை
30	(3) 6
31	(1)
32	(2) 40
33	(3) 30
34	(1)
35	(2) 30
36	(3) தனது மகளின்
37	(2)
38	(1)
39	(1) 6
40	(2) ரூபா 120.00

www.ikeduk